# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## இலங்கையின் பாற்பண்ணையாளர்களுக்கான ஆளுமைவிருத்தி செயல் திட்டம்

விசேட பயிற்சி மற்றும் ஆளுமை விருத்தி செயல்திட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காக இலங்கையைச் சேர்ந்த 20 பண்ணையாளர்களைக் கொண்ட பேராளர்கள் குழு ஒன்று 2026 ஆகஸ்ட் 16-23 வரை இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது. இலங்கை முழுவதுமிலிருந்து பாற்பண்ணையாளர்கள் இந்த குழுவில் அங்கம் வகித்திருந்தனர். 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது அவரால் விடுக்கப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் வருடாந்தம் 700 இலங்கையர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி ஆசனங்கள் ஒதுக்கப்படும் நிலையில் அதன் கீழான ஓர் செயல் திட்டமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

2. குஜராத்தில் உல்ள தேசிய பாலுற்பத்தி அபிவிருத்தி சபையில் இந்திய அரசாங்கத்தால் இந்த ஒரு வாரகால பயிற்சி திட்டம் நடத்தப்படுகின்றது. பாற்பண்ணை தொழில் குறித்த சகல விடயங்களையும் உள்ளடக்கியதாக இப்பயிற்சிநெறி நடைபெறுகின்றது. சகல தொழில் நுட்ப மற்றும் கருப்பொருள் ரீதியான விடயங்களையும் இது உள்வாங்கியுள்ளது. குறிப்பாக விலங்கு இனப்பெருக்கத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி, தர உத்தரவாதம், விலங்கு வகைகளுக்கான உணவூட்டல், சம போஷணையின் முக்கியத்துவம், மேம்பட்ட செயன்முறைகள், துறைசார் வலுவூட்டல், அதிக உற்பத்தி நுட்பங்கள் ஆகியவற்றை இப்பயிற்சித் திட்டம் உள்வாங்கியுள்ளது.

3. அனுபவ ரீதியான கற்றலுக்கு புறம்பாக இக்குழுவினர் IDMC-யின் மொத்த பால் குளிரூட்டும் அலகு (Bulk Milk Cooler Unit), அமுல் TMR தொழிற்சாலை, கைரா பால் சங்கம் மற்றும் NDDB-யின் தயாரிப்பு மற்றும் செயல்முறை மேம்பாட்டு ஆய்வகம் ஆகியவற்றுக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தனர். இந்த ஈடுபாடுகள், சமகால பால்வளக் கட்டமைப்புகள், நவீன உற்பத்தித் தொழில்நுட்பங்கள், மற்றும் வளர்ந்து வரும் சில்லறை மற்றும் விநியோகச் சங்கிலி நடைமுறைகள் குறித்த பெறுமதிமிக்க உள்நோக்குகளை வழங்கின.

4. தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு அப்பால், பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், ஸ்திரமான பால்வள கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும் முக்கியத்துவமளித்து, இந்தியாவின் வெற்றிகரமான பால்வள மாதிரியைப் பற்றி அறிந்துகொள்ள இந்த திட்டம் பங்கேற்பாளர்களுக்கு உதவியது. அத்துடன் இந்தப் பயிற்சி, திறமையான பால் பண்ணை முகாமைத்துவம், தூய்மையான பால் உற்பத்தி, சுகாதாரமான கையாளல் நடைமுறைகள், மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான அணுகுமுறைகள் ஆகியவற்றில் பங்கேற்பாளர்களின் ஆளுமைகளை வலுப்படுத்தியது.

5. இந்த விசேட பயிற்சித் திட்டம், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையேயான பால்வளத் துறை தொழில்முறைத் திறன்களை வலுப்படுத்துவதற்கும், அறிவுப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கும், நிறுவன மற்றும் தொழில் இணைப்புகளை மேம்படுத்துவதற்கும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியது. இது ஆளுமை விருத்தி மற்றும் மக்கள் சார்ந்த பொருளாதார ஒத்துழைப்புக்கான இரு நாடுகளின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றது.

******

**கொழும்பு**
**16 செப்டெம்பர் 2026**